*2 இராஜாக்கள் 10:18–36*

# முழு இருதயத்தோடு அர்ப்பணிப்பு

**மற்றவர்களுடைய பாவங்களை அதிகமாய் சொல்லிவிட்டு நாம் செய்கிற பாவங்களை மறைத்துவிட வாய்ப்புகள் உண்டு.**

**பாகாலின் ஆராதனை ஒழிக்கப்பட்டது (வச.18-27) :** பாகாலின் சகல தீர்க்கதரிசிகளையும், பணிவிடைக்காரர்களையும், ஆசாரியர்களையும் ஒரே நேரத்தில் கொல்லுவதற்கு யெகூ தீர்மானம் பண்ணி அவர்களை தந்திரமாய் ஒரு இடத்திற்கு வரவழைத்தான். எல்லோரையும் கொன்றது மட்டுமன்றி பாகால் ஆலயத்தை உடைத்து, பாகாலின் சிலையை தகர்த்து, விக்கிரகங்களை வெளியே எடுத்து வந்து, அவைகளைத் தீயிட்டு கொளுத்தினர். முழுவதுமாக பாகாலின் ஆராதனை தேசத்தில் ஒழிக்கப்பட்டது. தேவன் திட்டமாய் தனது ஜனத்திற்கு மோசேயின் மூலம் கூறினது என்னவென்றால், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.

**யூதனென்றுமில்லை:** ஆனாலும் யெகூ இஸ்ரவேலைப் பாவம் செய்யப் பண்ணின யெரோபெயாமின் பாவங்களை விட்டு விலகவில்லை. ஆகாபின் குடும்பத்தை முற்றிலும் அழித்து, பாகாலின் ஆராதனை ஒழித்து, தேவனைப் பிரியப்படுத்தின யெகூ தன் முழு இருதயத்தோடும், கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தில் நடக்க கவலைப்படவில்லை. ஒரு வேளை பொன் கன்றுக் குட்டிகள் அகற்றப்படுமானால் இஸ்ரவேல் மக்கள் எருசலேமுக்கு தேவனை ஆராதிக்க சென்றுவிடுவார்கள். அதை தடுப்பதற்கதாக பொன் கன்றுக்குட்டிகள் ஒழிக்கப்படவில்லை. பாகால் வழிபாடு ஆகாபின் குடும்பத்தால் வந்தது, ஆனால் பொன் கன்றுக் குட்டிகளை காலகாலமாய் உள்ளது. மேலும் பாகால் விக்கிரமாகவும், தேவனுக்கு எதிராகவும் கருதப்பட்டது. ஆனால் பொன் கன்றுக்குட்டிகளோ தேவனுடைய பிரதிநிதிகளாக கருதப்பட்டன. யெகூ வடக்கு இராஜ்ஜியத்தை சேர்ந்த நபராக தன் ஜனத்திற்கு கலாசாரத்திற்கும் பயந்து பொன் கன்றுக்குட்டிகளை ஒழிக்கவில்லை. மிகவும் வருத்தமான செயலாகும். அதினால் யெகூ கர்த்தரை தன் முழு இருதயத்தோடு பின்பற்றாமல் போய்விட்டார். அதே போல் நம் வாழ்க்கையிலும் நடைபெறலாம். ஒரு வேளை பாகாலை ஆராதிப்பவர்கள் போல் விக்கிரக ஆராதனை செய்பவர்களாக காணப்பட மாட்டோம். நமது மக்கள், நமது கலாச்சாரம் என்று தவறான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நமது வாழ்க்கையில் பொன் கன்றுக் குட்டிகளை ஒழிக்காமல் இருந்துவிடலாம்! தேவனை பிரியப்படுத்தாத வாழ்க்கை வாழக் கூடும்.

**ஆண்டவரே, உம்மை முழு மனதோடு நேசிக்க, ஆராதிக்க கிருபை தாரும். ஆமென்.**